இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 323 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 18 – திங்கள்கிழமை 03 ஜூலை 2023 – திருச்சி★★ 8 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 323 : Thiruvalluvar Year - 2054 - Aani 18 - Monday 03 July 2023 - Trichy★★ 8+8 Pages ₹ 5.00


## நாளைய தேவைகளையும் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை

# திராவிட மாடல் ஆட்சி செயல்படுத்தி வருகிறது!

## திரு.வி.க. நகர் மண்டலத்தில் ‘செங்கை சிவம் பாலத்தை’ திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 3 -**

**இன்றைய தேவைகளை மட்டுமின்றி நாளைய தேவைகளையும் கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி செயல்படுத்தி வருகிறது என்று திரு.வி.க. மண்டலம் ஸ்டீபன்சன் சாலையில் செங்கை சிவம் பாலத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2023) திரு.வி.க.நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்கை சிவம் பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:**

ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே இருந்த பழுதடைந்த பாலத்தை இடித்து அகற்றிவிட்டு, ஓர் புதிய பாலத்தை அமைத்திட வேண்டும் என்று முடிவெடுத்து அதையும் குறித்த காலத்தில் கட்டி முடித்து அந்த பாலத்தினுடைய திறப்பு விழா நிகழ்ச்சி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு கொளத்தூரையும் வில்லிவாக்கத்தையும், வில்லி வாக்கத்தையும்அண்ணா நகரையும் இணைக்கக் கூடிய ஒரு மேம்பாலத்தை நான் திறந்து வைத்தேன். அப்படி திறந்து வைத்த நேரத்தில் நம்முடைய மாவட்ட செயலாளர் அமைச்சர் சேகர் பாபு அவர்களும், நகராட்சித் நிர்வாகத் துறையினுடைய அமைச்சர் நேரு அவர்களும், ஸ்டிபன்சன் சாலையிலே புதிதாக கட்டடப்பட்டு இருக்கக்கூடிய பாலம் தயாராக இருக்கிறது, நீங்கள் உடனடியாக தேதி தந்தால் அதை திறந்து விடலாம் என்று என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். நானும் உடனடியாக அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்.

### செங்கை சிவம் பெயரை பாலத்திற்கு சூட்டலாம் என்றேன்!

அப்போது அவர்கள் அந்தப் பாலத்திற்கு யாருடைய பெயரை சூட்டலாம் என்று ஒரு வினாவை என்னிடத்தில் தொடுத்தார்கள். நான் உடனடியாக சொன்னேன். இந்த பெரம்பூர் பகுதியில் அன்றைக்கு திரு.வி.க. நகர் பகுதி, பெரம்பூர் பகுதி என்று ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்த அந்த நேரத்தில், இந்த பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை இந்த தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி மறைந்தாலும் நம்முடைய நெஞ்சமெல்லாம் இன்றைக்கும் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய செங்கம் சிவம் அவர்களுடைய பெயரை சூட்டலாம் என்று நான் அப்போது சொன்னேன். உடனடியாக அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2023) திரு.வி.க. நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் 66 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்கை சிவம் பாலத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், மாநகராட்சி ஆணையர் ஜெ.இராதாகிருஷ்ணன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பாலத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று நான் சொன்னேன். அதைவிட செங்கம் சிவம் அவருடைய பெயரால் அமைந்திருக்கக் கூடிய பாலத்திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு ஏற்கனவே நான் சொன்னபடி அந்த பாலத்தை திறந்து வைத்தபோது, அந்த பாலத்திற்கு தியாக மறவன் சிட்டிபாபு பெயர் சூட்டப்பட்டது. இப்படி பல்வேறு பாலங்களுக்கு நம்முடைய தலைவர்கலைஞர்அவர்கள்முதலமைச்சராக இருந்த அந்த நேரத்தில் இதே சென்னை மாநகரத்தில் பல்வேறு பாலங்கள் திறந்து வைக்கப்பட்ட போது, பல்வேறு மேம்பாலங்களாக இருந்தாலும், சுரங்கப்பாதைகளாக இருந்தாலும், கட்டிடங்களாக இருந்தாலும், அந்த கட்டிடங்களுக்கு, அந்த பாலங்களுக்கு, சுரங்கப் பாதைகளுக்கெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இயக்கத்திற்காக, குறிப்பாக திராவிட இயக்கத்திற்காக உழைத்து பல்வேறு தியாகங்களை செய்திருக்கக்கூடிய இந்தத் தியாகச் செம்மல்கள் பெயர்களையெல்லாம் சூட்டியிருக்கிறார்கள்.

**திரும்பிய பக்கம் எல்லாம் சென்னையின் தேவையை தீர்த்து வைத்தவர் இன்றைக்கு நூற்றாண்டு விழா காணக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு அவர் கட்டிய அண்ணா மேம்பாலம்தான் இன்றைக்கு அரை நூற்றாண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. வாழ்ந்து நிறைந்ததற்குப் பிறகும் பயன்தரத்தக்க எத்தனையோ நல்ல பல திட்டங்களை நமக்காக உருவாக்கிக் கொடுத்தவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவருடைய வழித்தடத்தில் தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

### மக்களின் தேவைகளுக்கு பணியாற்றியவர் செங்கை சிவம்!

அந்த நினைவுகளை எல்லாம் மனதில் வைத்து தான் இந்த பெரம்பூர் தொகுதியில் கழகம் வளர்க்க, கழகம் வளர, இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு அரும்பணியாற்றிய, அந்த பணிகள் எல்லாம் இன்றைக்கும் என்னுடைய நினைவில் இருக்கிறது. 1989ல் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவன். 1996ல் சட்டமன்ற உறுப்பினராக செங்கை சிவம் அவர்கள் சபையிலிருந்து பணியாற்றியபோது நானும் சபையிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவன். அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இந்த தொகுதியினுடைய வளர்ச்சிக்கு இந்த தொகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, இந்த தொகுதி மக்களுடைய தேவைகளுக்கு, எண்ணங்களுக்கு ஏற்ற வகையில், மிக மிக சிறப்பாக பணியாற்றியவர். ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அடையாளமாக இருந்து பணியாற்றியவர் செங்கை சிவம் அவர்கள். அவருடைய பெயரில் இந்த பாலம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் சென்னையை வலம் வந்து பார்த்தால், நீங்கள் பார்க்கக்கூடிய பெரும்பாலான பாலங்கள் திராவிட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில், கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் உருவாக்கப்பட்டவை!

அண்ணா சாலையில் ஒரு காலத்தில் ஜெமினி சர்க்கில் என்று சொல்லக்கூடிய ஒரு இடம். அது இன்றைக்கு அண்ணா மேம்பாலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு தலைவர் கலைஞர் அவர்கள் மேம்பாலத்தை அந்த இடத்தில் உருவாக்கி, அண்ணா மேம்பாலம் என்று அதற்கு பெயர் சூட்டினார்கள். இன்றோடு அந்த பாலம் 50 ஆண்டு கால வரலாற்றை பெற்றிருக்கிறது.

அதேபோல, அண்ணா சாலையிலிருந்து, சைதாப்பேட்டையை கடந்து மீனம்பாக்கத்திற்கு போகின்றபோது இடையில் கத்திபாரா பாலம். அந்த பாலமும் நம்முடைய கழக ஆட்சி காலத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### சென்னையின் தேவையை தீர்த்து வைத்தவர் கலைஞர்!

கோயம்பேடு பாலமாக இருந்தாலும் சரி,

செம்மொழிப் பூங்காவாக இருந்தாலும் சரி,

ஏன் வள்ளுவர் கோட்டமாக இருந்தாலும் சரி,

நெம்மேலியில் அமைந்திருக்கக்கூடிய கடல் நீரை குடிநீராக்கும் திட்டமாக இருந்தாலும் சரி,

டைடல் பார்க்காக இருந்தாலும் சரி,

இன்றைக்கு ஒரு பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் பெயரில் அமைந்திருக்கக்கூடிய மருத்துவமனை தலைமைச் செயலகம் அமையவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்து, பார்த்து கட்டினார்கள். அது அரசியல் சூழ்நிலையின் காரணமாக பெயர் மாற்றப்பட்டது. அதற்குள் நான் அதிகம் செல்ல


தொடர்ச்சி 2 ஆம் பக்கம்


## அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை!

*சென்னை, ஜூலை 3-*

*முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசுப் பணியிடங்களில் முன்னுரிமை வழங்குவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளைத் தமிழக அரசு அரசாணையாக வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், “மனித வள மேலாண்மைத்துறையின் 2021 - 2022 ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை தொடர்பான உரையின்போது, அமைச்சர் (நிதி, மனிதவள மேலாண்மை) அவர்களால், வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப் படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சட்டமன்ற பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

*அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகள், கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் மற்றும் தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்காக இவ்வரசாணை வெளியிடப்பட்டுள்ளது. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்குவது தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது” என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## அமைச்சர் செந்தில் பாலாஜி பதவி நீக்க விவகாரம்:

# தமிழ்நாடு ஆளுநர் ரவியை குடியரசுத் தலைவர் நீக்க வேண்டும்!

## தேசியத் தலைவர்கள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 3-

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜியை நீக்கி உத்தரவு பிறப்பித்த தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவியை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தேசிய கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழ்நாடு அமைச்சரவையில் இருந்து அமைச்சர் செந்தில்பாலாஜியை நீக்கி நேற்று முன்தினம் இரவு கவர்னர் ஆர்.என்.ரவி உத்தரவு பிறப்பித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரை இல்லாமல் கவர்னர் எடுத்த நடவடிக்கை அரசியல் சாசன சட்டத்தை மீறியதாக கூறி அனைத்து தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தனது உத்தரவை வாபஸ் பெறுவதாக நள்ளிரவில் ஆர்.என்.ரவி அறிவித்தார். கவர்னரின் இந்த நடவடிக்கைக்கு தேசிய அளவிலும் கண்டனங்கள் குவிந்துள்ளன. அவரை கவர்னர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது. இதுபற்றி தலைவர்களின் கண்டன அறிக்கை வருமாறு: -

**மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் எந்த அளவுக்குப் புதைக்கப்பட்டுள்ளது என்பது திகைக்க வைக்கிறது. நமது மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசை அழிக்கும் மோடி அரசு தோற்கடிக்கப்பட வேண்டும்.

**காங்கிரஸ் மூத்த தலைவர் மணிஷ் திவாரி:** தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவியை ஜனாதிபதி உடனடியாக நீக்க வேண்டும். கவர்னருக்கு அவரின் வரம்புகள் எதுவும் தெரியவில்லை. இது போன்ற அரசியல் அமைப்பு விதிகளை மீறும் செயல்களை கவர்னர் செய்து இருக்கக் கூடாது. தனது பொறுப்புகள் என்னவென்றும் அரசியல் அமைப்பு பற்றியும் கவர்னருக்கு தெரியவில்லை என்பதையே அவரது நடவடிக்கைகள் காட்டுகிறது.

**தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுப்ரியா சுலே:** ஆர்.என்.ரவி தமிழ்நாடு கவர்னராக அல்ல, பா.ஜ.வின் கவர்னர் போல் செயல்பட்டு உள்ளார். அவரது நடவடிக்கை சர்வாதிகாரம். இதில் அரசியலமைப்பும் ஜனநாயகமும் எங்கே இருக்கிறது. தமிழ்நாட்டிலேயே இதுபோன்ற சம்பவம் நடக்குமானால், மற்ற மாநிலங்களிலும் நடக்கலாம்.

**மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேஷன் பொதுச்செயலாளர் திபாங்கர் பட்டாச்சார்யா:** தமிழ்நாடு கவர்னர் ஆர். என்.ரவி மீண்டும் மீண்டும் தனது அதிகார வரம்பை மீறி, சாகசச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார். மோடி அரசில் அரசியல் சாசனம் மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பின் மீதான போர் நாளுக்கு நாள் அசிங்கமாகி வருகிறது. கூட்டாட்சி அமைப்பை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மார்க்சிஸ்ட் பொலிட்பீரோ:** கவர்னரின் நடத்தை அரசியல் சாசனத்திற்கு எதிரான ஒன்று. தமிழ்நாடு அரசியலில் தலையிடுவது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளிலும் தலையிட்டு மேலும் சில தவறான நடவடிக்கைகளை கவர்னர் ரவி எடுத்துள்ளார். அவர் கவர்னர் பதவியை வகிக்க தகுதி இல்லாதவர் என்று கண்டனம் தெரிவித்துள்ளனர்.




தமிழினத் தலைவர்
கலைஞர் நூற்றாண்டு
சிறப்பிதழ்
இன்று (03.07.2023)
‘முரசொலி’யுடன்
8-பக்கம் இணைப்பு!